**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : சுதா** | **Father/Husband's Name : செந்தில் குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பல்லடத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். நான் 2–3 வருடங்களுக்கு முன்பு சிந்தலவாடம்பட்டி என்ற ஊரில் குடியிருந்து வந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 15.01.2020ம் தேதி மாலை 6.45 மணியளவில் நானும், எனது சித்தப்பா மதிவாணன் என்பவரும் பழனியிலிருந்து சிந்தலவாடம்பட்டிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம். அப்போது எனது கணவர் செந்தில் குமார் பழனி பைபாஸ் அருகே நின்றுக் கொண்டிருந்தார். அப்போது அவரை பார்த்து பேசிவிட்டு நாங்கள் ஊருக்கு சென்று கொண்டிருப்பதாக சொன்னோம். அவரும் எங்களுடன் வருவதாக சொன்னார். நான் எனது சித்தப்பா இருசக்கர வாகனத்தில் சென்றேன். எனது கணவரின் இரு சக்கரவாகனமான பல்சர் கருப்பு நிற பதிவெண் TN 57 AW 4609 என்ற எண்ணுள்ள வாகனத்தில் எங்களுக்கு முன்னே 20–30 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தார். நாங்கள் அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் கணக்கன்பட்டி அருகே உள்ள சிவ மரபு சித்தாந்த சபை அருகே சென்று கொண்டிருந்தபோது, கிழக்கு இருந்து மேற்காக ஒரு கார் வந்தது. அந்த காரை ஓட்டி வந்த நபர் அந்த காரை கிழக்கிலிருந்து மேற்காக வரும் போது

ரோட்டில் வலது புறம் ஏறி வேகமாக வந்து, எனது கணவர் செந்தில் குமார் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். நாங்களும், எனது கணவரும் மேற்கில் இருந்து கிழக்காகச் சென்று கொண்டிருந்தோம். விபத்தை ஏற்படுத்தியவுடன் உடனே சென்று பார்த்தபோது எனது கணவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரது உடம்பில் ஊமை காயம் ஏற்பட்டிருந்தது. அந்த கார் Ford fiesta Car வெள்ளை நிறம் ஆகும். அந்த காரின் பதிவெண் TN 21 J 8858 ஆகும். அந்த காரை ஓட்டி வந்த நபர் தெரியாமல் கவனக்குறைவில் வந்துவிட்டேன் என்று சொன்னார். பின்பு அந்த காரிலேயே எனது கணவரை பழனி அரசு மருத்துவமனைக்கு நான் எனது சித்தப்பா மற்றும் அந்த காரை ஓட்டி வந்த நபர் ஆகியோர் கொண்டு வந்தோம். காரை ஓட்டி வந்த நபரின் பெயர் கேட்ட போது ரஷ்யகுணசிங் என்று சொன்னார். அதற்கு பிறகு நான் காவல் நிலையத்தில் இரவு 7.30 முதல் 9 மணிக்கு மேல் புகார் கொடுத்தேன். எனது கணவருக்கு சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்று இரவு 1 மணியளவில் எனது கணவரை மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். ஒரு வாரம் எனது கணவருக்கு சிகிச்சைக் கொடுத்தார்கள். பின்பு சிகிச்சை பலனளிக்காமல் 22ம் தேதி இரவு 7 மணிக்கு எனது கணவர் இறந்துவிட்டார். அந்த காரை ஓட்டி வந்த நபர் தான் விபத்துக்கு காரணம். அந்த காரை ஓட்டி வந்த நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.05.15 16:33:23 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : மதிவாணன்** | **Father/Husband's Name : கிருஷ்ணசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 15.01.2020ம் தேதி தைப் பொங்கல் அன்று நானும், எனது அண்ணன் மகள் சுதா என்பவரும் இருசக்கரவாகனத்தில் பழனியிலிருந்து சிந்தலவாடம்பட்டிக்கு மாலை சுமார் 6.45–7 மணியளவில் சென்று கொண்டிருந்தோம். எனது அக்கா மகனும், அ.சா.1–ன் கணவருமான செந்தில் குமார் என்பவர் S.S. chamber–ல் வேலை முடித்துவிட்டு வந்தபோது பைபாஸ் அருகே அவரை பார்த்துவிட்டு, அவர் எங்களுக்கு முன்னால் பல்சர் TN 57 AW 4609 என்ற இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்தார். செந்தில் குமார் எனக்கு முன்னால் 50 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தார். நாங்கள் கணக்கன்பட்டியை அடுத்துள்ள தியானமண்டபத்துக்கு அருகே சென்றபோது கிழக்கிருந்து வந்த கார் பிஸ்தா எண் TN 21 J 8858 என்ற கார் கிழக்கிருந்து மேற்காக பழனி நோக்கி ரோட்டில் right side ஆக வந்து, செந்தில் குமார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. செந்தில் குமாரை பார்த்தபோது தலையில் அடிபட்டிருந்தது. அதற்கு பிறகு, அந்த காரிலேயே செந்தில் குமாரை ஏற்றிக் கொண்டு சுதாவும் ஏறிக் கொண்டு பழனி அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். நானும் எனது இருசக்கரவாகனத்தில்

வந்தேன். பின்னர் அரசு மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். அதனை தொடர்ந்து இரவு சுமார் 9.30 மணியளவில் காவல் நிலையம் சென்று சுதா புகார் அளித்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் அளித்தேன். காரை ஓட்டி வந்த நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவரின் பெயர் ரஷ்யகுணசிங். காரை ஓட்டி வந்த நபர் தான் right side ஏறி வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார். செந்தில் குமாரை அன்று இரவு பழனி அரசுமருத்துவமனையிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையில் இருந்த செந்தில் குமார் 22ம் தேதி இறந்துவிட்டார்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.05.15 16:33:31 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : லிங்கப்பன்** | **Father/Husband's Name : சின்னசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**
**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எனது மாமா மதிவாணன் எனக்கு போன் மூலம் அவரது அக்கா மகனான செந்தில் குமார் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாகவும், பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல் சொன்னார். நான் அங்கு சென்று பார்த்தபோது, செந்தில் குமார் என்பவருக்கு மேல்சிகிச்சைக்காக மதுரை செல்ல வேண்டும் என பேசி கொண்டிருந்தார்கள். மேற்படி விபத்தானது கணக்கன்பட்டி மூட்டசாமியார் மடம் அருகே உள்ள பாலத்தில் நடைபெற்றதாகவும், மேற்படி செந்தில் குமார் Chamber–ல் வேலை செய்துவிட்டு சிந்தலவாடம்பட்டிக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய கார் கிழக்கிலிருந்து, மேற்காக வந்து விபத்தை ஏற்படுத்தியதாகவும், நான் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.05.15 16:33:49 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : விஜயராஜ்** | **Father/Husband's Name : பழனிசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் தற்போது சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.01.2020ம் தேதி சுமார் 6.45–7 மணியளவில் பழனியிலிருந்து வேலை முடித்துவிட்டு சிந்தலவாடம்பட்டி வீட்டுக்கு வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது கணக்கன்பட்டியை அடுத்துள்ள சர்க்குரு சபை அருகே கிழக்கு நோக்கி செந்தில் குமார் என்பவர் சென்று கொண்டிருந்ததாகவும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய காரானது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து செந்தில் குமார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், எனக்கு ஊரில் உள்ள நபர்கள் தகவல் சொன்னார்கள். தகவலின் பேரில் பழனி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது செந்தில் குமார் சிகிச்சையில் இருந்தார். மேற்படி விபத்துக்கு காரணம் கார் ஓட்டி வந்த நபர் ஆவார் என நான் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.05.15 16:33:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.5**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Father/Husband's Name : துரைசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**
**முதல் விசாரணை**

நான் தற்போது சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.01.2020ம் தேதி மாலை சுமார் 7.45–8 மணியளவில் எனக்கு தெரிந்த நபர் மூலம் செந்தில் குமார் என்பவருக்கு விபத்து ஏற்பட்டது என தகவல் சொன்னார்கள். மேற்படி விபத்தானது சர்க்குரு ஞானசபை அருகே பழனி – திண்டுக்கல் ரோட்டில் விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், செந்தில் குமார் என்பவர் பழனியிலிருந்து சிந்தலவாடம்பட்டிக்கு சென்றதாகவும், செந்தில் குமாருக்கு கார் மோதி விபத்து ஏற்பட்டதென எனக்கு தகவல் சொன்னார்கள். நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சையில் இருந்த செந்தில் குமாரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். காரை ஓட்டி வந்த நபரால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.05.15 16:34:34 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.6**

| | |
|---|---|
| **Name : ராமசாமி** | **Father/Husband's Name : கிருஷ்ணசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.05.2022**

**எதிரி ஆஜராகவில்லை. கு.வி.ந.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். எங்கள் ஊரைச் சேர்ந்த செந்தில் குமாருக்கு விபத்தாகிவிட்டது. தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்தபிறகு, நானும் துரைசாமியும் இருசக்கரவாகனத்தில் பழனி – திண்டுக்கல் ரோட்டில் சச்சிதானந்த சபை அருகே போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று கொண்டிருந்த இருசக்கரவானத்தை நிறுத்தி எங்களை விசாரித்துவிட்டு அந்த இடத்தில் படம் வரைந்தார்கள். அந்த இடத்தில் இருந்த விவரங்களை எல்லாம் பார்த்து எழுதிக் கொண்டு எங்களிடம் கையொப்பம் கேட்டு பெற்றார்கள். நானும், துரைசாமியும் கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2025.05.15 16:34:43 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**